20.7.2023

வா.சா.1 - சந்திரசேகரன்

அ.வ.எண். 146/2018

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் எனது மனைவிக்காக நான் சாட்சியளிக்கிறேன். வழக்கு சங்கதிகள் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எங்களது இடத்திற்குள் பிரதிவாதி இடைஞ்சல் செய்தால் அவர் மீது வழக்கு தாக்கல் செய்கிறேன். பிரதிவாதி கல், கால்களை உடைத்தது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. புகார் கொடுக்காமல் புகார் கொடுத்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வசந்தாமணியிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன். வசந்தாமணி பொதுஅதிகார முகவர் போஜராஜனிடம் இருந்து கிரையம் பெற்றார். போஜராஜன் பழனியப்ப வகையறாவிடமிருந்து பொது அதிகாரம் பெற்றார். வழக்கு சொத்து பழனியப்பன் கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் கீழ் தான் உள்ளது. பொது அதிகார பத்திரம் வழக்கின் 2 வது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். போஜராஜனின் பொது அதிகார பத்திரத்தில் உள்ள நான்கெல்லை தெரியாது. வா.சா.ஆ.2, 5 ல் குறிப்பிட்டுள்ள சொத்தின் செக்குபந்தியில் ஆறுமுகதேவர் பூமிக்கு கிழக்கு என்றும் கருப்பாத்தாள் வள்ளியாத்தாள் பூமிக்கு மேற்கே என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி செக்குபந்தி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.வ.எண்.94/2017 என்ற வழக்கின் பிராது வா.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.9 ல் பழனியப்பன் வகையறா விற்பனை செய்த 0.51-1/4 பூமிக்கு கிழக்கு என்றும், கருப்பாத்தாள் வள்ளியம்மாள் பூமிக்கு மேற்கு என்றும் உள்ளது. பிரதிவாதியின் சொத்தை பொது அதிகார ஆவணத்தில் செக்குபந்தியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.7, 8 ஆவணத்தில் அ.வ.எண்.94/2017 வழக்கில் தீர்ப்பிலும்,

தீர்ப்பாணையிலும் ஆவண எண்.9 குறிப்பிட்டுள்ள பிரதிவாதியின் செக்குபந்தி சரி என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றால் சரியல்ல. அவர் கொடுத்ததாக சொல்லும் பவர் பத்திரம் போலியானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் உள்ள செக்குபந்தியும் தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2, 3, 5 இதில் குறிப்பிட்டுள்ள சொத்தின் செக்குபந்தி தவறானது என்றால் சரியல்ல. போஜராஜன் பழனியப்பனிடம் வாங்கிய பொது அதிகார பத்திரம் போலியானது என்றும் பிரதிவாதிகளின் சொத்தை பவர் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ன் அடிப்படையில் தான் அ.வ.எண்.94/2017 ன் தீர்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2, 3 போலியானது என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் தவறானது என்பதால் போஜராஜனிடம் இருந்து வசந்தாமணி கிரையம் பெற்ற பத்திரமும் தவறானது என்றால் சரியல்ல. வசந்தாமணிடமிருந்து எனது மனைவி வாங்கிய கிரையப் பத்திரமும் தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்திற்குள் நாங்கள் வாங்கிய சைட்டுகள் எங்களுடையது என்று கேட்பதற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வசந்தாமணி போஜராஜனிடம் இருந்து 1996 ல் கிரையம் பெற்றார். போஜராஜன் அதே வருடம்தான் பவர் வாங்கினார். வாதி 2011 ல் வசந்தாமணிடம் இருந்து சொத்தை கிரையம் பெற்றார். வசந்தாமணி தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்துதான் எங்களுக்கு கிரையம் கொடுத்தார் என்பதை காட்ட நான் ஆவணங்கள் தாக்கல் செய்யதுள்ளேன். வசந்தாமணி பெயரில் உள்ள சிட்டா நகல்கள் கொடுத்துள்ளேன்.

2012 ல் பிரதிவாதி எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்னிட்டு நாங்கள் வருவாய்துறை ஆவணங்களில் எங்களது செல்வாக்கை பயன்படுத்தித பெயர் மாற்றம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. பட்டா, சிட்டா ஆகியவை ஒரு சொத்தின் உரிமையை காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. போலீஸ் புகாரில் எங்கள் அனைவரையும் விசாரித்தனர். அந்த விசாரணையில் பழனியப்பன் அ.வ.எண்.94/2017 ல் உள்ள தீர்ப்பை

ஏற்றுகொள்வதாக எழுதிக்கொடுத்துவிட்டு வந்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அதற்கு போஜராஜனும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6,7,8 ன் படி நான் என்னுடையது என்று குறிப்பிடும் சொத்து பிரதிவாதியுடையது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2, 3ன் படி க.ச.எண்.301ல் 1.02-1/2 ஏக்கர் என எனது வாக்குமூலத்தில் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 3ன் படி ஒவ்வொரு பொது அதிகார பத்திரத்திலும் 50 சென்ட் என மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எதனடிப்படையில் 1.02-1/2 ஏக்கர் என சொல்லியுள்ளேன் என்றால் மூலப்பத்திரத்தின் அடிப்படையில் எழுதியுள்ளேன். நாங்கள் 2-1/2 சென்ட் சேர்த்து மனைகளாக பிரித்து உள்ளது தவறு என்றால் சரியல்ல. இதனடிப்படையில் மேற்படி பொது அதிகார பத்திரம் தவறானது என்பது நிரூபணம் ஆகிறது என்றால் சரியல்ல. அ.வ.எண்.94/2017ல் நீதிமன்றம் ஆவணங்களை பரிசீலனை செய்து சரியான வகையில்தான் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.16 வரையுள்ள ஆவணங்கள் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து பார்க்கப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் பழனியப்பன் சொத்து பிரதிவாதியின் சொத்திற்கு கீழ்புறம் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே அ.வ.எண்.94/2017 ல் குறிப்பிட்டுள்ள பிரதிவாதிகளின் சொத்து நீதிமன்ற ஆணையரின் அறிக்கையின் அடிப்படையில் பழனியப்பன் பூமிக்கும் கீழ்புறம் உள்ளதாக ஊர்ஜிதம் ஆகிறது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை அலட்சியம் செய்து நாங்களாக ஒரு வரைபடம் வா.சா.ஆ.18 தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.18ல் குறிப்பிட்டுள்ள சொத்து பிரதிவாதிகளின் பூமிக்குள் உள்ளது என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் எங்களுடைய 15 சென்ட் நிலம் தனியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கோரும் 15 சென்ட் நிலம் பிரதிவாதிகளின் இடத்திற்குள் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற

ஆணையர் பிரதிவாதிஞக்கு 51-1/4 சென்ட்டும் பழனியப்பன் வகையறாவிற்கு 51-1/4 சென்ட்டும் பிரித்து கொடுத்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.1ன் படி முத்துகுமாரசாமிக்கு 1.02-1/2 ஏக்கர் ஒதுக்கினார்கள். க.ச.எண்.301/1 மொத்த பரப்பளவு 5 ஏக்கர் இருக்கும். அந்த சொத்தில் கிழமேலாக தென்புறம் முத்துகுமாரசாமிக்கு 2.66-1/2 ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. முத்துகுமாரசாமி ஏ பாகத்திற்கு 1.2-1/2 ஏக்கர் பி பாத்திற்கு கருப்பாத்தாள், தெய்வானை, வள்ளியம்மாள் தலா 82 சென்ட் என்றால் எனக்கு தெரியாது. முத்துகுமாரசாமியின் 1.02-1/2 ஏக்கரில்தான் கீழ்புறம் பழனியப்பனுக்கும் மேல்புறம் ஆறுமுகத்திற்கும் தலாா 51-1/4 சென்ட் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு காரணம் நான் குறிப்பிடும் தவறான செக்குபந்தி என்றால் சரியல்ல. 1990ம் ஆண்டு பழனியப்பனுக்கு மேல்புறம் என்றும் ஆறுமுகத்திற்கு கீழ்புறம் என்று வாய்மொழி பாகப்பிரிவினையில் பிரித்து அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ.7,8,9 ஆவணங்களின் அடிப்படையில் அ.வ.எண்.94/2017ல் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிலும் போஜராஜன் பெற்ற போலியான சொத்து விவரத்தின் கீழ் இந்த வழக்கு சொத்து விவரத்தையும் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

கருப்பாத்தாள் வகையறா 18-1/2 சென்ட் நிலத்தை இனாம் பூமியாக ஆறுமுகத்தேவர் வகையறாவிற்கு கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ஆறுமுகத்தேவர் இறக்கும் வரை அதை அனுபவம் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அதன் பின்பு பிரதிவாதிகள் அந்த இனாம் பூமியை அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் எனக்கு தெரியாது. ஆணையர் அவரது அறிக்கையில் மேற்ப 15 சென்ட் நிலத்தை கம்பு வேலி அமைத்துள்ளதாக சொல்லியுள்ளார். எங்களது வழக்கு சைட் எண்.18, 19, 20, 21, 22பா என்றால் சரிதான். மேற்படி மனைகளை பிரித்துக் காட்டக்கூடிய வகையில் கம்பி வேலி அமைத்துள்ளதாக ஆணையர் அறிக்கையில் சொல்லவில்லை. நேடியாக தல

ஆய்வு செல்லாமல் பத்திர அலுவலகத்திலேயே வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/சந்திரசேகரன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

N RENUGA

Digitally signed by N RENUGA
Date: 2023.07.26 16:45:47 +0530

District Munsif,
Sulur.